உலகத தமிழ்மகாநாட்டில ஈழததுக கவிஞரின்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி எண். 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 331
தேசிய தினசரி

... பிலவங்க மார்கழி 25 ஷவ்வால் 8 செவ்வாய்க்கிழமை [9-1-68]

## “பூம்புகாரில்ஒருநாள்”

### நாகராஜனுக்குப் பரிசு



சென்னை, ஜன. 8

ஈழத்துப் பிரபல தமிழ் கவிஞர் இ. நாகராஜனின் கவிதைக்கு உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

சென்னைத் தமிழ் அபிவிருத்தி துறை டைரக்டர் திரு. பெருமாள் முதலியார் இதனை அறிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

மாவட்டசபை மசோதா:

# ஆளும் கட்சிக் குழு பரிசீலனை

கொழும்பு செவ்வாய்

**மாவட்டசபை நகல் மசோதாபற்றி இன்று நடைபெறும்பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா அங்கத்தவர்களுக்கு விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம், இன்று கொழும்பு வந்து சேருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் நடைபெறும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில், தேசியஅரசாங்கத்தின்சார்பில் கலந்து கொண்டுள்ள மந்திரி திருச்செல்வம்பாராளுமன்ற குழு கூட்டத்தில் கலந்துகொள்ளும்பொருட்டு இன்று வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுவதாக தமிழரசுக் கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளச்சென்ற தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம், தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் இன்று கொழும்பு வந்து சேருவார்களெனத் தெரிய வருகிறது.

தேசிய அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மாவட்டசபை நகல்மசோதாவிற்கு ஆதரவுவழங்குவ

(8-ம் பக்கம் பார்க்க)

சுப்ரீம் கோர்ட்டில்

## சதிவழக்கு விசாரணை 16ம் திகதி ஆரம்பம்

கொழும்பு, திங்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீதான வழக்கு ஜனவரி 16-ம் திகதி சுப்ரீம் கோர்ட்டில் ஜூரி சபையினர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் ஜி.பி. ஏ.சில்வா. நீதியரசர் சிவசுப்பிரமணியம், நீதியரசர் தென்னக்கோன் ஆகியவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். நீதியரசர்களுக்கு ஜி. பி. ஏ. சில்வா தலைமை தாங்குவார்.

## திருவொற்றியூரில் பொலிஸ் சுட்டது

### மூவர் படுகாயம்

சென்னை ஜன. 8

தமிழ்நாட்டில் திருவொற்றியூரிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை யொன்றில் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்டகைகலப்பு காரணமாக நிலைமையைச் சமாளிக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு தொழிலாளி படுகாயமடைந்து ஆபத்பத்தான நிலையிலிருக்கிறார். மற்றுமிரு தொழிலாளர் காயமடைந்தனர். 18 பொலிசார் தொழிலாளரின் கல்வீச்சினால் காயமடைந்தனர்.

இத்தொழிற்சாலையின் ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி சென்றமாதம் 28-ந் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

## ஒட்டிப்பிறந்த இரட்டையர் உயிருடன் இருக்கின்றனர்

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஜன. 8

தென்னாபிரிக்காவிலுள்ள ஜோஹன்னர்ஸ் பேர்க்கில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் டாக்டர்களின் வெற்றிகரமான சத்திர சிகிச்சைக்குப்பின், பிரிக்கப் பட்டுள்ளன.

அவை இதுவரை நல்ல உடல் நிலையுடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு குழந்தைகளும், தலைப் பக்கத்திலேயே ஒட்டிப்பிறந்தன.

இவ்இரட்டையர்கள்தப்பி உயிருடன்தொடர்ந்துஇருந்தால், ஒட்டிப்பிறந்த இரட்டையர் உயிருடன் வாழ்வது இதுவே முதற்தடவையாக இருக்கும்.

## மாணவ-ஆசிரிய பரீட்சை

மாணவ - ஆசிரியர் பரீட்சை இவ்வருடம் ஏப்ரல் மாதம் 24-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு உதவு முகமாக ‘ஈழநாடு’’ மாதிரி வினாவிடைகளை வெளியிடவிருக்கிறது. 10-1-68-ந் திகதி ‘‘ஈழநாடு’’ பத்திரிகையில் முதலாவது மாதிரி வினாவிடைகள் வெளிவரும்.

## நடிகர் எம். ஜி. ஆர். பரிசுகளை வழங்குவார்

தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நடைபெற்ற கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றுள்ள கவிஞர்களுக்கான பரிசுகளை பிரபல தமிழ் நடிகர் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் வழங்கவிருக்கின்றார்.

இலங்கைக் கவிஞர்கள் உட்பட 1200 கவிஞர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள். இவர்களில் 10 பேர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். முதல் மூன்று பரிசுகளும் தங்கப் பதக்கங்கள்.

**அண்ணா பரிசு**

இந்த மூன்று பரிசுகளில் முதல் பரிசு ‘‘அண்ணா பரிசு’’ என்று பெயரிடப்பட்டுள்ளது. திரு. கு. ஏ. சண்முகம் என்ற கவிஞர் முதல் பரிசைப் பெறுகின்றார். இரண்டாவதுபரிசுதிரு திருஞானசம்பந்தம் என்ற கவிஞருக்கு கிடைக்கின்றது, எம். சந்தானம் என்ற கவிஞர் மூன்றும் பரிசினைப் பெறுகின்றார்.

முதல் மூன்று பரிசுகளையும் தவிர மற்ற ஏழு பரிசுகளும் சான்றிதழ்களா வழங்கப்படவிருக்கின்றன.

## பஸ்ஸுக்குள் விலையுயர்ந்த சேலைகள்

இமையாணன், திங்கள்

வல்லை பாலத்தில் பஸ் ஒன்றில் பொலிஸார் சோதனையிட்டபோது ஒருவரிடமிருந்து சுமார் ஆயிரம் ரூபாய்க்கு மதிகமான விலையுயர்ந்த ஒளவையார் சாறிகளும் விலையுயர்ந்த சாரங்களும் வைத்திருந்ததாக கண்டுபிடித்துள்ளனர். நேற்று பிற்பகல் சுமார் 5 மணியளவில் நடந்த இச் சம்பவம் சம்பந்தமாக மன்னாரைச் சேர்ந்த அப்துல்லா சலீம் என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைதுசெய்து றிமாண்டில்வைத்துள்ளனர்.

இவரிடமிருந்த ஒளவையார் சாறிகளும் 4 வோயில் சாறிகளும் 10 சங்குமார்க் சாரங்களும் கைபபற்றப் பட்டு சுங்கப் பகுதியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதுசம்பந்தமாக அப்துல்லா சலீம் தனது புகாரில் தான் வியாபாரம் செய்வதற்காக சுமார் 1200 ரூபா மன்னாரி

[8-ம் பக்கம் பார்க்க]

## பரந்தன் வாசிக்கு 2 வது பரிசு

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரியில் இழுக்கப்பட்ட 175வது தேசிய சீட்டிழுப்பில் 2வதுபரிசுக்கான டிக்கட் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவதுபரிசு பரந்தனில்உள்ள ஒரு தொழிலாளிக்கு விழுந்திருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் 11 டிக்கட்டுகளுக்கு ஆறுதல் பரிசுகிடைத்திருக்கிறது.

## காரைத்துரத்தி பொலிஸார் பிடித்தனர்

### சாரங்கள் பிடிபட்டன: இருவர் கைது

இமையாணன், திங்கள்

சந்தேகத்தின் பேரில் பொலிசார் ஒரு காரைப் சோதித்தபோது அதிலிருந்து விலை உயர்ந்த 188 பழைய காட்சாரங்கள் கைப்பற்றப் பட்டன. வல்வெட்டித்துறை பொலிசார் வல்லை பாலத்தில் சோதனையிட்டுக் கொண்டிருக்கும்போது வல்வெட்டித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு காரை முதலில் மறித்த பொழுது அக்கார் நிறுத்தாததால் காரைபொலிசார் துரத்திப்பிடித்தனர். இச் சாரங்கள் கைப்பற்றப்பட்டு சுங்க இலாகாவில் ஒபபடைக்கப்பட்டது. அக்காரில் இருந்த பொன்னுத்துரை சோதிநாராயணசாமி, தம்பிராசாசுந்தரசேகம் ஆகிய இருவரையும் கைது செய்து ரிமாண்டில் வைத்துள்ளனர். சென்றசனிக்கிழமை இரவு இச்சம்பவம் நடந்தது.

## படகு கவிழ்ந்து 12 பேர் பலி

இஸ்தான்புல், ஜன. 8

துருக்கியின் தலைநகரமான இஸ்தான்புலில் புயற்காற்று வீசியதில் ஒரு மோட்டார் படகு கவிழ்ந்து அதிலிருந்த பன்னிரண்டு பேரும் மாண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இலவசம்!

மில்க்வைற் சோப் 72 கட்டிகள் கொண்ட மேல் உறைகள் 100 சேகரித்து தரும் விற்பனையாளர்களுக்கு ஓர் அழகான 'லித்தோ' வர்ணப்படம் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். போன்: 7233. 1907

### தேவை

சொந்தத்தில் சயிக்கிள் வைத்து ஓடக்கூடிய விற்பனையாளர் தேவை. பிணைப் பணம் எதிர்பார்க்கப்படும். 13-1-68 முன் விண்ணப்பிக்கவும் மனேஜர், விழா பீடிக் கொம்பனி, 171, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 2045

### கல்வி

வகுப்புகள்:

ஜீ. சீ. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம் வர்த்தக வகுப்புகள் பயிற்சி பெற்ற பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. எமது மாணவர்களில் நூற்றுக்கு நூறு பேர் சித்தியடைகிறார்கள். புதிய மாணவர்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். யுனைடெட் இன்ஸ்டிட்யூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி, 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 179 பிரதான வீதி, கல்முனை. 2043

### விற்பனைக்கு

கார்

CN 7893 இலக்க மொறிஸ் மைனர் விற்பனைக்குண்டு. கூடிய கேள்வியாளர்களுக்கு விபரங்களுக்கு: 441, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2046

அச்சகம்

ஆங்கிலம், தமிழ் எழுத்துக்கள், சகல தளபாடங்களுடன் நல்ல நிலைமையிலுள்ள அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: எஸ். ஏ. நடராசன், 2, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 2048

### தேவை

தொழிலாளர்

மரம் தறிக்கவும் துண்டு போடவும், தளபாடங்கள் செய்யவும், கல் அரியவும், பாறை கல் முதலியன உடைக்கவும், தெருக்கள் போடவும் கட்டட வேலைகள் செய்யவும் தொழிலாளிகள் தேவை. துண்டு வேலைக்கணக்கில் சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். எச். எம். ஆசீர்வாதம், ஊவா குடா-ஓயா, வெல்லவாயா மாவட்டம், அம்பாந்தோட்டையிலிருந்து 35 மைல். 2049

**REGAL** JAFFNA
4-45, 7-00 & 9-45 p.m.
Tony Randall
Shirley Jones
in
Universal's
FLUFFY
(Color)

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
CIRCUS STARS
(Cinemascope - Technicolor)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி, வீரப்பா
நடித்த
**நாகநந்தினி**

2-வது வெற்றிவாரம்
கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை)
பிளாஸா (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பதுளை)



சுந்தரராஜன்
ஏ.வி.எம் ராஜன்
முத்துராமன்



ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
மலர்
நடிக்கும்
**மேஜர் சந்திர காந்த்**


# வல்லை நெய்தல் ஸ்தாபனத்திற்கு மேலும் 20 மின்தறிகள்

## ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தலைவர் தகவல்

இமையாணன், திங்கள்

இலங்கைநூற்றல்— நெய்தல் வரையறை ஸ்தாபனத்தின் எட்டாவது வருடாந்தக் கூட்டம் திரு.வி. இராசசேகரம் தலைமையில் நடைபெற்றது. 300 அங்கத்தவர்களுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் தலைமையுரையின் போது திரு.வீ. இராசசேகரம் பின்வருமாறு கூறினார்.

முன்னர் இந்த ஆலை 25வீதம் முன்னேற்றமடைந்தது. தற்பொழுது நமது தலைமையில் மேலும் 25வீதம் முன்னேற்றமடைந்துள்ளது மேலும் 50வீதம் முன்னேற்றமடைய இடமுண்டு 1966-ம் ஆண்டின் கணக்கின்படி 9வீதம் லாபப்பங்கீட்டுப்பணம் கொடுக்க சபை தீர்மானித்துள்ளது. 1967ம் ஆண்டின் கணக்கின்படி சேமிப்புப் பணத்திற்காக ஒதுக்கும் நிதியை நீக்கி 12 வீதத்திற்குக் குறையாமல் லாபப் பங்கீட்டுப்பணம் கொடுக்க முடியும்.

இப்பொழுது இருப்பதை விட மேலதிகமாக இருபது மின்தறிகளும், அதன் உப-உறுப்புக்களும் நமது ஆலைக்கு மிக விரைவில் வரவிருக்கின்றன. இவற்றின்விலை சுமார் ரூபா ஐந்துலட்சத்திற்குமதிகமென மதிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர் குழுவில் காலியாயிருந்த மூன்று காலிஸ்தானங்களுக்கு திருவாளர்கள் மா. கனகசபையும் க. கணபதிப்பிள்ளையும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர். மூன்றுவது ஸ்தானத்திற்கு திரு. சி. அப்புக்குட்டி தெரிவு செய்யப்பட்டார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்- தலைவர் திரு.வீ. இராசசேகரம் காரியதரிசி- திரு ச. ஞானமூர்த்தி, இயக்குனர் குழுவினர்- திரு. மா. கனகசபை, டாக்டர் ஞா விக்கினராசா திருவாளர்கள் ப. நவரத்தினராசா, கே. பி, செல்லையா வி.கே. இராசலிங்கம் ஏ. எஸ். குமாரசாமி சி.வே. சிவசுப்பிரமணியம் க. கணபதிப்பிள்ளை சி. அப்புக்குட்டி

# மணிவாசகர் சபை சமய பாடப்பரீட்சை முடிவுகள்

காரைநகர், திங்கள்

காரைநகர் வணிவாசகர் சபையினரால் நடாத்தப்பட்ட சைவ சமயப்பாடப் பரீட்சை முடிவுகளில் முதற்பகுதி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்தது. இது இறுதிப்பகுதி:

**வலந்தலை தெற்கு**

**அ. மி. பாடசாலை**

ஆ லோகேந்திரன், நி மகேந்திரன், சி லோகநாதன், செ ரவீந்திரன், சோ ஸ்கந்தராசா, செ சச்சிதானந்தம், ச சிவகுமார், மு செல்வரத்தினம், சோ கணேசபிள்ளை, அ. தனபாலசிங்கம், க பாலசுப்பிரமணியம், அ யோகேஸ்வரன், தி நித்தியானந்தன், ஆ சிவசோதி, ப அமிர்தானந்தா, சே கிருபா, து உமாதேவி, வி வீரமங்கை ஸ்டாலினு, இ மகேஸ்வரி, பே சரஸ்வதி, ச பரமேஸ்வரி, கா அர்தாம்பிகை, செ இரசகுமாரி, க புஷ்பதேவி, வ செல்வஇந்திராணி, ஐ கௌரிதேவி, நா பத்மசோதி, வி நாகரத்தினம், வை அரியமலர், செ வரலட்சுமி, கா கமலாம்பிகை, இ கிருஷ்ணதேவி, வி சோமேஸ்வரன்.

**காரைநகர்**

**மகளிர் வித்தியாலயம்**

சோ சிவபாக்கியம், ச மகேஸ்வரி, க கிருபைமலர், க பாக்கியம், மு தேவநாயகி, அ சாந்தகுமாரி, வ புவனேஸ்வரி, மா மங்கையர்க்கரசு, சு தியாகேஸ்வரி, க பாலாம்பிகை, சோ கமலாதேவி, க சிவபாக்கியம், சோ லலிதாம்பிகை, இ இராசகிளி, மு. நிர்மலா, சி இராசலட்சுமி.

**மெய்கண்டான் தமிழ் கலவன் பாடசாலை**

மா வரதராசா, சி தவராசா, வே அருளானந்தம், சீ சரவணபவா ம கந்தசாமி, க கிருஷ்ணபிள்ளை, க சிவசுப்பிரமணியம், ச குமரகுரு, க இராசலிங்கம், த சற்குணராசா, செ குமாரசாமி, ஐ தேவராசா, நா குலேந்திரன், ஆ சதாசிவம், சி சிவயோகர், அ குகதாசன், செ விஜயலட்சுமி, சு குகவேணி, சு தவமணி, [illegible] மல்லிகாதேவி, க புஷ்பராணி, மு நாகேஸ்வரி, ம சிவகலை, மா புவனேஸ்வரி, சு ஏகநாயகி, ச இந்திராதேவி, சி மங்கையர்க்கரசி, சி சரோசினிதேவி.

**மத்திய பிரிவு**

**மகளிர் வித்தியாலயம்**

வே உமாதேவி, ஆ ஜெயலட்சுமி மு கண்ணகி, வே உலகேஸ்வரி, ச வசந்தகுமாரி, சி இராசமலர், கி விஜயலட்சுமி, சு சரோஜினிதேவி.

**இந்துக்கல்லூரி**

க சிவபாதசுந்தரம், வி பரமேஸ்வரசர்மா, செ கணேசலிங்கம், க யோகராசா, ஆ வரதராசா, அ விவேகானந்தம், க மகாலிங்கம், ச பொற்கலை, பே தனலட்சுமி சி சிவசோதி, செ சுலோசனு, க பத்மராணி, ந சிவஞானம், க கனகேஸ்வரி.

**மேற்பிரிவு**

**இந்துக்கல்லூரி**

எஸ் முத்தையாபிள்ளை, எஸ் சோதிநாதன், எஸ் ஜெகதீஸ்வரன், செ சுப்பிரமணியம், சி சுசீலாதேவி, ஆர் மதுரைமீனுட்சி, ஆ புஸ்பராணி, சி சச்சிதானந்தம்.

(முற்றும்)

# பதிவுகாரருக்கு புதிய உத்தரவு

சுழிபுரம் திங்கள்

வடபகுதியிலுள்ள பதிவுகாரர்களுக்கு புதிய உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வுத்தரவில் பென்சன்பணம்பெறும் ஒருவர் இறந்தால், அவருடைய பென்சன் இலக்கத்தை மரணப் பத்திரத்தில் பதிவதுடன், அவர்களிடமிருந்த பென்சன் கார்ட்டை எடுத்து அனுப்பவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. பென்சன் பணம் பெற்றவர்கள் இறந்தால் அவரின் மரணத்தைப் பதியச்செல்பவர் பென்சன் கார்ட்டையும் இனி எடுத்துச்செல்லவேண்டும்.

# வானொலி நிகழ்ச்சிகள்

### செவ்வாய் 9-1-68

## இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 இசை அமுதம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 கிளாரினட், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 பேட்டி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 நேயர் விருப்பம்.

## சென்னை-1

காலை 6-00 மங்கள இசை, 6-15 திருப்பாவை— திருப்பள்ளி எழுச்சி 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம், 7-15 தமிழில் செய்தி, 7-30 பாட்டு, 8-15 நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 9-15 வீணை, 9-45 பாட்டு, 10-30 மதுரகீதம், 10-55 ஆங்கிலத்தில்செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 வீணை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில்செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 விஞ்ஞான விமர்சனம்—வி. ராமமூர்த்தி, 8-15 ஜனதாநகர்—தொடர் நாடகம், 8-45 நாட்டுப் பாடல்கள், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மகாநாடு கருத்தரங்கின் தொகுப்புரை, 10-30 திரைகானம்.

## திருச்சி-1

காலை 6-30 மங்கள இசை, 6-50 பக்திப் பாடல், 6-55 அறவுரை— தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, 7-00 திருப்பாவை- திருப்பள்ளி எழுச்சி, 7-15 தமிழில் செய்தி, 7-30 துதிப்பாடல்கள், 8-15 நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்மகாநாட்டு கருத்தரங்கின் தொகுப்புரை, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 திரைப்பட இசை, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 துதிப்பாடல்கள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 இசை மஞ்சரி, 6-35 வாத்திய இசை, 6-45 ஊர்ச்சாவடி, 7-00 நாட்டுப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 திரைப்படஇசை, 8-45 கிளா

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தொடர்ச்சி)

ரினெட், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்கின் தொகுப்புரை-சென்னை அஞ்சல், 10-30 ஆங்கிலத்தில் செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்கப்பலை அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதாகப் புகார்

## ஆத்திரமூட்டும் நடவடிக்கை எனச் சீனு சீற்றம்

பீகிங், ஜன. 8

வடவியட்னும் துறைமுகமொன்றின் மீது நடத்திய தாக்குதலில், அமெரிக்க விமானங்கள், சீனச் சரக்குக் கப்பல் ஒன்றின் மீது குண்டு வீசியுள்ளதாகச் சீனு குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தக்குண்டு வீச்சு, ஹனேயிலிருந்து சுமார் 85 மைல் தூரத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தவிமானத் தாக்குதலில், குண்டு வீச்சுக்கு இலக்கான சீனக் கப்பல் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், கப்பற் சிப்பந்திகளில் பலர் காயத்துக்குள்ளானதாகவும் பீகிங் அறிவித்துள்ளது.

இதே தாக்குதலில், ஒரு ரஷ்யக் கப்பலும் தாக்கப்பட்டதையொட்டி, ரஷ்யா, அமெரிக்காவிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது. அதற்குப் பதிலளிக்கையில், ரஷ்யக்கப்பல் மீதான தாக்குதல் நடைபெற்றிருந்தால், அது தற்செயலாக நடந்தசம்பவமாகவே இருக்கலாமென்றும், அதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் அமெரிக்கா கூறியிருந்தது.

சீனக் கப்பல் மீதான அமெரிக்கத் தாக்குதலை, 'அமெரிக்காவின் ஆத்திரமூட்டும் மற்றுமொரு பாரதூரமான நடவடிக்கை' யெனச் சீனு அறிவித்துள்ளது.

## ஈமன் உள்நாட்டுப் போர்

### சர்வதேச தலையீட்டுக்கு குடியரசின் கோரிக்கை

சாஞ, ஜன. 8

முடியரசுவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகியுள்ள ஈமன் குடியரசு, நாட்டில் மேலும் இரத்தக்களரி ஏற்படாமற் தடுப்பதற்கெனச் சர்வதேச குறுக்கீட்டுக்குக் கோரியிருக்கிறது.

ஈமனில் நடைபெறும் உள்நாட்டுப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவியளிக்குமாறு, ஈமன் குடியரசு, ஐக்கிய நாடுகள் சபை, அரபு லீக், மற்றும் அரபுநாடுகளிடம் வேண்டிக் கொண்டுள்ளது.

இப்படி, அந்நிய தலையீட்டை ஈமன் கோரியிருப்பது, இது இரண்டாவது தடவையாகும். கடந்த வாரமும், ஈமன் இவ்வாறு கோரியிருந்தது.

**150 பேர் கொல்லப்பட்டனர்**

இதற்கிடையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை சாஞவுக்கருகே நடைபெற்ற ஒரு சண்டையில், 150 முடியரசுவாதிகளைத் தாம் கொன்றுள்ளதாகக் குடியரசுவாதிகள் உரிமைபாராட்டியுள்ளனர்.

அச்சண்டையில் கைப்பற்றப்பட்டவர்கள் சிலரிடமிருந்து அகப்பட்ட தஸ்தாவேஜுகள், முடியரசுவாதிகளுக்குதவியாக அந்நிய கூலிப்படையினரும்சண்டையில் பங்குபற்றுவதை நிரூபித்துள்ளதாகக் குடியரசுவாதிகள் அறிவித்துள்ளனர். இந்த அந்நிய கூறிப்படையினருக்குப் பின்னுல் சவூதி அரேபியா இருப்பதாகவும் அவர்கள்தெரிவிக்கின்றனர்.

## தேசீய ஒருமைப்பாடும் அரசியல் வாதிகளும்

### திரு. வி.வி. கிரி கருத்து

ஜாம்ஷெட்பூர், ஜன. 8

தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்னையை அரசியல்வாதிகளிடம் மட்டும் விட்டுவிடக் கூடாது என்று இந்திய உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

கலாச்சாரம்கூட, அரசியல் வாதிகளின் கைகளில், வேறு வர்ணம் பூசப்பட்டுவிடுகிறது என்ருர் திரு வி. வி. கிரி. கலாச்சாரத்தின் உண்மையான அர்த்தத்தை அரசியல்வாதிகள் மறைத்துவிடுகிருர்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்குமிடையேயும் கலாச்சாரப்பரிமாறல்கள் அதிக அளவில் நடைபெறவேண்டுமெனவும் திரு. வி வி. கிரி கேட்டுக்கொண்டார். நாடுகளுக்கிடையே இப்போது உளள தூதரகத் தொடர்புகளின் அடிப்படையில், இக்கலாச்சாரத் தொடர்புகளும் அமையவேண்டுமென்ருர், உபராஷ்டிரபதி.

## கம்போடியா வந்துள்ள ஜோன்சனின் விசேஷபிரதிநிதி

### இளவரசர் ஷிஹானுக் சந்திப்பார்

நாம்பென், ஜன. 8

கம்போடியா வந்துள்ள அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்சனின் விசேஷ தூதுவரான திரு. செனட்டர் பவுல்ஸைத் தாம் இரு தடவை சந்திக்கவிருப்பதாகக் கம்போடிய இளவரசர் ஷிஹானுக், இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

முதலாவது சந்திப்பு நாளை நடைபெறுமென இளவரசர் அறிவித்தார்.

வட வியட்னுமியரைக் கம்போடிய எல்லைக்குள் அமெரிக்கத்துருப்புகள் பின்தொடருவதுபற்றி, விசேஷ தூதுவருடன் தாம் பேசுவதற்குச் சம்மதிக்கப்போவதில்லை என இளவரசர் கூறினுர்.

கம்போடியாவிலுள்ள சோவியத் தூதுவரையும், சர்வதேசக் [illegible] கமிஷனில் [illegible] வகிக்கும் போலந்துப் பிரதிநிதியையும் தாம் சந்திக்கப் போவதாகவும் இளவரசர் தெரிவித்தார்.

வியட்னுமில் சமரசம் ஏற்படுத்துவதுபற்றி, விசேஷ பிரதிநிதி திரு. செஸ்ட்டர் பவுல்ஸுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளுமாறு வடவியட்னும் தமக்கு எதுவித அறிகுறியும் தெரிவிக்கவில்லை என்று பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்[illegible]

## அம்மானில் ஜாரிங்

அம்மான், ஜன. 8

மேற்கு ஆசியாவிலுள்ள ஐ. நா. விசேஷ பிரதிநிதியான டாக்டர் குனர் ஜாரின், ஜோர்தான் தலைநகரான அம்மான் வந்துசேர்ந்துள்ளார். அவர் ஜோர்தான் மன்னர் ஹுசெயினையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவார்.

முன்னதாக, அவர், இஸ்ரேலிய வெளியுறவு மந்திரி திரு. எபானை ஜெருசலத்தில் சந்தித்துப் பேசியிருந்தார்.

## லளிதகலை விருது

புதுடில்லி, ஜன. 8

பாரதிய லளிதகலைக்கழக விருதுகள் 10 பேருக்குவழங்கப்படவிருக்கின்றன. இவ் விருதுகள் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பத்துப்பேரில் திருவாளர்கள் எல் முனிசாமி, எம். பன்னீர்ச்செல்வம், ஏ. விசுவநாதன் ஆகியோர் தமிழர்கள்.

## அமெரிக்காவில் இஸ்ரேல் பிரதமர்

வாஷிங்டன், ஜன. 8

இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கோல், டெக்ஸாஸ் வந்துசேர்ந்துள்ளார் அங்குள்ள அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்சனின் வயற்புற வாசஸ்தலத்தில் திரு. எஷ்கோல், திரு. ஜோன்சனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

அமெரிக்காவிடம் இஸ்ரேல் ஆயுதங்கள் பெறுவது பற்றித் திரு. எஷ்கோல் திரு. ஜோன்சனிடம் கேட்டுக்கொள்வார் எனத் தெரிகிறது.

## டிட்டோவின் ஆசிய விஜயம்

கபுல், ஜன. 8

யூகோஸ்லாவிய ஜனுதிபதி டிட்டோ ஆப்கானிஸ்தான் தலைநகரான கபுலுக்கு தமது ஒரு மாத ஆசிய விஜயத்தின் முதற் கட்டத்தில், வந்து சேர்ந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு டிட்டோ விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்

பின்னர் இந்தியா, பாகிஸ்தான், கம்போடியா, எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கும் டிட்டோ செல்வர்.

## 3 அரேபியர் சுட்டுக்கொலை

அம்மான், ஜன. 8

ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையில், இஸ்ரேலிய துருப்புகள் மூன்று அரபியரைச்சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்த அரபியர்கள் தமது எல்லைக்குள் பிரவேசிக்கபோதே சுட்டதாக இஸ்ரேலிய வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் வியட்னுமில்

## தானுங் அருகே கடுமையான வியட்கொங் தாக்குதல்

சைகோன், ஜன. 8

தென் வியட்னுமிலுள்ள பெரிய அமெரிக்க விமானத்தளமாகிய தானுங்குக்கருகேயுள்ள நகரமொன்று, வியட்கொங்கியரின் கடும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அங்குநடைபெற்ற கடுமையான சண்டையொன்றில், 50 வியட்கொங்கியரும், 16 அமெரிக்கப்போர் வீரரும் கொல்லப்பட்டதாகவும் அவை அறிவித்தன.

## சமாதானத்தில் அமெரிக்க ஆர்வம்

### வட வியட்னும் சந்தேகம்

இதற்கிடையில், வட வியட்னும் மீது அமெரிக்கா குண்டுவீச்சையும், மற்றும் போர் நடவடிக்கைகளையும் நிறுத்திஞல், அமெரிக்காவுடன் வடவியட்னும் சமாதானம் பேசத்தயாராகவிருப்பதாக வடவியட்னும் வெளியுறவு மந்திரி அறிவித்ததற்கு உலகினில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் ஆக்கபூர்மானதாகவிருப்பதாக ஹனேயில் வடவியட்னும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆஞலும்கடந்தசில தினங்களில், வடவியட்னும் மீது அமெரிக்கா நடத்தியுள்ள விமானத் தாக்குதல்கள், சமாதானத்துக்கு அமெரிக்கா உண்மையில் விருப்பமுடையதா என்பதுபற்றிப் பலத்தசந்தேகத்தை விளைத்துள்ளதாக அந்த அதிகாரி கூறினுர்.

## சீனத் தடுப்புக்காவலில் உள்ள ரொயிட்டர் நிருபர்

பீகிங், ஜன. 8

கடந்த ஜூலை மாதந் தொடக்கம் சீனுவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ரொயிட்டர் செய்தித்தாபனத்தின் பிரிட்டிஷ் நிருபரான திரு. கிரே, வெளியே நடமாட உரிமைகள் அளிக்கப்படாதிருப்பதாகப் பீகிங்கிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரது தொலைபேசித் தொடர்புகளும் அறுக்கப்பட்டுள்ளன. அவரை விடுதலை செய்யுமாறு ரொயிட்டர் ஸ்தாபனம் சீனப் பிரதமர் திரு. சூ என் லாயிடம் விண்ணப்பித்திருந்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஹொங்கொங்கிலுள்ள சீனப் பத்திரிகையாளர் ஒருவரை பிரிட்டிஷ் அரசாங்கம் முன்னதாகத் தடுப்புக் காவலில் வைத்ததைத் தொடர்ந்து, பதில் நடவடிக்கையாகவே தாம் பிரிட்டிஷ் நிருபரைக் கைது செய்து வைத்துள்ளதாகப் பீகிங் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க, தென்னுபிரிக்க மாற்று இருதயநோயாளிகள்

### உடல்நிலை சுகம்

கலிபோர்னியா, ஜன. 8

அமெரிக்காவிலும், தென்னுபிரிக்காவிற்போல் ஒருவருக்கு மாற்று இருதயப் பொருத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த நோயாளியும் தமது தென்னுரிக்கச் சகமாற்று இருதயப்பொருத்தக்காரர்போல், சுகமாகவே இருக்கிருராம்.

இந்த அமெரிக்க நோயாளியின் வயது 54. இவருக்குச் சத்திரசிகிச்சை செய்யப்படுவதற்கு இரண்டுமணி நேரத்துக்கு முன்னுல் இறந்த ஒரு 43 வயதுப பெண்ணின் இருதயமே, இவருடைய இருதயத்துக்குப் பதிலாகப் பொருத்தப்பட்டது.

ஆஞலும், அமெரிக்க நோயாளி, தமது வாழ்நாள் முழுவதும் அபாயகரமான நிலையிலேயே இருப்பாரென டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

**தென்னுபிரிக்க நோயாளி**

இதுஇப்படியிருக்க, தென்னுபிரிக்காவில், கேப்டவுனில் மாற்றுஇருதயப்பொருத்தம் செய்யப்பட்ட பல் வைத்தியர், படிப்படியாகத் தமது உடல்நிலையில் முன்னேறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மனைவிபேச அனுமதி**

அவருடைய மனைவி, ஒரு கண்ணுடி ஜன்னலினூடாக, அவருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார். தொற்றுவியாதிக்குப் பயந்தே, கண்ணுடி ஜன்னல் மூலம் மனைவி பேசவிடப்பட்டார்.

தென்னுபிரிக்க நோயாளி கலகலப்பாகவும் சந்தோஷமாகவும் இருப்பதாகவும், வழமையான உணவை உட்கொள்ள ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

## ஈமனில் கடும் சண்டை

சாஞ, ஜன. 8

ஈமனில் குடியரசுத் துருப்புகளுக்கும் மன்னர் படைகளுக்குமிடையில் கடுமையான சண்டை நடைபெற்றுக்கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னர் துருப்புகளில் 200 பேர் கொல்லப்பட்டதாகவும் சவூதி அரேபியா மன்னர் படைகளுக்கு உதவியளித்து வருவதாகவும் குடியரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தாயெழிற் தமிழை எந்தன் தமிழரின் கவிதை தன்னை ஆயிரம் மொழியிற் காண இப்புவி அவாவில் தென்றல், தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தெந்தன் செவியில் வந்து பாயு நாள் எந்த நாளோ யாரிதைப் பகர்வாரிங்கே.

— பாரதியார்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஷூ மார்கழி மீ 25உ (9-1-68)

## திட்டங்களுக்குப் பணமில்லை

அபிவிருத்தித்திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றப் பணம் இல்லை என்று நிதி அமைச்சு கை விரிப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. நாட்டின் நிதி நிலைமை மிக மோசமான கட்டத்தையும் தாண்டி அவலநிலையைஅடைந்துற்ளதென்பது உண்மையே. ஆயினும் அவசியமான, அத்தியாவசியமான நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய — நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களை எப்படியாயினும் எதுவிதத்திலும் நிறைவேற்றவேண்டும்.

பணம் இல்லையென்பதற்காக உப உணவு உற்பத்தித்திட்டங்களைக் கைவிடவோ, இறக்குமதி செய்யப்படும் உணவுத் தானிய பண்டங்களைச் சேமித்து வைப்பதற்கான பண்டகசாலைகளை விஸ்தரிக்கும் நோக்கத்தைக் கைவிடுவதோ, வீதிப் போக்குவரத்து வசதிகளைச் செய்ய முடியாது என நிறுத்துவதோ, சேதமடையும் நிலையிலுள்ள புகையிரத நிலையங்கள், மற்றும் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய தொழிற்சாலைகளின் விஸ்தரிப்புத் திட்டங்களைக் கைவிடுவதோ நாட்டுக்கு எந்தவிதத்திலும் நன்மை செய்யமாட்டாது.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலை சீர்கேடடைந்ததற்கு இன்றைய அரசாங்கத்தை மட்டும் குறை கூறிப் பயனில்லை. இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிடுவதாலோ அல்லது இந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்து நீங்கி வேறு ஓர் அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறுவதாலோ நாட்டின் பொருளாதாரம் திடீர் என சீரடைந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. முன்னைய அரசாங்கங்கள் ஆட்சிபீடத்திலிருந்தபோதும் பொருளாதாரம் சீர்குலைந்துதான் வந்தது இன்றும் இதேநிலைதான் ஆட்சிபீடத்தில் மாற்றம்செய்வதால் நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளோ அதையொட்டிய இதர பிரச்னைகளோ தீர்ந்துவிடுமென்று யாரும் துணிந்து கூறமாட்டார்கள்.

பொருளாதாரப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. தேசிய ரீதியில் தான் இதற்கு நல்ல வழி காணமுடியும். அரசியல் பொருளாதார நிபுணர்கள் இதை மனதில் கொண்டு செயலாற்ற முன்வரவேண்டும்.

## இன ஒதுக்கலுக்கு முடிவு

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ. நா.வும் மற்றும் பலநாடுகளும் பெரியார்களும் முயற்சி செய்தும்கூட வெற்றி காண முடியவில்லை. ஆனால் தென்னாபிரிக்க வைத்திய நிபுணர்கள் இனஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சியில் வெற்றியீட்டி பெரும் சாதனையை நிலைநாட்டி விடுவார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

கிளைவ்ஹோப்ட் என்னும் நீக்ரோ ஒருவரின் இருதயத்தை எடுத்து பிளெய்பேர்க் என்ற வெள்ளையரின் கெட்டுப் போன இருதயத்துக்குப் பதிலாகப் பொருத்தி அவரை உயிர் வாழவைத்திருக்கிறார் பேராசிரியர் கிறிஸ்டியன் பேர்னார்ட். கறுப்பரின் இருதயம் பொருத்தப்பட்ட வெள்ளைக்காரர் உடல்நிலை அபிவிருத்தியடைந்து வருகிறது. புதிய இருதயம் பொருத்தப்பட்டவர் உணவு உட்கொள்ளுகிறார். இன்னும் சில தினங்களில் வீடு திரும்பவிருக்கிறார்.

குரங்கு, பன்றி ஆகியவைகளின் இதயங்களையும் மனிதனுக்குப் பொருத்த முடியுமென்றும் இது இன்னும் 20 ஆண்டுகளில் நடைமுறைக்கு வருமென்றும் டாக்டர் பேர்னார்ட் நம்புகிறார். மனித இருதயங்களை குரங்கில் பொருத்தி பாதுகாத்து வைக்க முடியுமென்றும் அவர் கூறுகிறார்.

விஞ்ஞானம் என்னென்ன புதுமைகளை, சாதனைகளையெல்லாம் நிகழ்த்தவிருக்கிறதோ! எல்லாம் நன்மைக்கே.

## கைப்பணி ஆரம்பவிழா

தருமபுரம், திங்கள்

தருமபுரம் கஸ்தூரிபாய் காந்தி நிலையத்தால் வெண்காய கூடு முடையும் கைப்பணிப்பயுற்சி நிலையத் தலைவர் திரு. சி. பி. தியாகராசா தலைமையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

குடிசைக் கைத்தொழில் இலாகா அதிபர் கரைச்சிக் காரியாதிகாரி ஆகியோர் ஆரம்ப விழாவில் கலந்து உரை நிகழ்த்தினர்.

பயிற்சி ஆசிரியர் திரு. என். கணபதிப்பிள்ளை பேசுகையில் விஸ்வமடு போன்ற படித்த வாலிபர் விவசாயப் பண்ணையில் உற்பத்தியாகும் வெண்காயத்தைச் சேமித்து வைக்க இப்பயிற்சி நிலையத்தின் மூலம் சிறந்த பணியாற்றலா மெனவும் வயதுவந்த பெண் பிள்ளைகள் கண்ணியமாக தொழில் செய்து முன்னேற இந்நிலையம் வாய்ப்பளிக்கு மெனவும் குறிப்பிட்டார்.

"கண்ணகிக்கு சிலை எடுத்ததுபோல்

# மாதவிக்கும் சி
# எழுப்பியிருக்க வேண்

## உலக தமிழ் மகாநாட்டு
## கருத்தரங்கில் அபிப்பிராயம்

சென்னை, ஜன. 8

'சிலப்பதிகாரத்தில் அன்பில் சிறந்தவள் கண்ணகியா, மாதவியா என்று அறுதியிட்டுக் கூறமுடியாத அளவுக்கு இரு பாத்திரங்களின் நற்பண்பையும் பின்னி இளங்கோவடிகள் காப்பியம் புனைந்திருக்கிறார் என்றும் கண்ணகியும் மாதவியும் தமிழ் இலக்கியத்தில் இரு கண்களைப் போன்றவர்கள்'' என்றும் தமிழ்ப் பேராசிரியர் திரு மு. இராசாக்கண்ணனார் கூறினர்.

கண்ணகிக்கு சிலையெடுத்த மாதிரி மாதவிக்கும் சிலையெழுப்பியிருக்கவேண்டும் எனப் பல பேச்சாளர்கள் குறிப்பிட்டார்கள்.

### பட்டி மன்றம்

சிலப்பதிகாரத்தில் அன்பில் சிறந்தவள் ''கண்ணகியா-மாதவியா?'' என்ற பொருள்பற்றி உலகத்தமிழ் மகாநாட்டையொட்டி இன்று தீவுத்திடல் பூம்புகார் நகரில் பட்டிமன்றம் நடாத்தப்பட்டது.

தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. இராசாக்கண்ணனார் தலைமைவகித்தார்.

அன்பிற் சிறந்தவள் கண்ணகியே என்று பல மேற்கோள்காட்டி மூன்று பண்டிதர்களும், ''அல்ல, மாதவியே'' என்று மூன்று பண்டிதர்களும் பேசினார்கள். இந்தப் பட்டிமன்றத்தில் இரண்டு கட்சியிலும் ஒவ்வொரு பெண்மணியும் இருந்தனர்.

கண்ணகி சார்பில் திருமதி தியாகராஜன் பேசுகையில் ''கண்ணகி கோவலன்பால் இறுதிவரை உறுதியோடு இருந்தாள். அவளது நெஞ்சில் சதா சர்வகாலமும் இருந்தது தனது கணவன் கோவலனின் உருவமே. இது அவளுடைய நீங்கா அன்புடைமையைக் காட்டுகிறது.

ஆனால் மாதவியோ ஆடினாள்; பாடினாள்; கூடினாள் ஆயினும் கோவலன் இறுதியில் நாடிச்சென்றது கண்ணகியிடம் தானே'' என்று கேட்டார்.

''அன்பும் அறமும் கை கோர்த்துச் சென்றது கண்ணகியிடம் தான்'' என்று அந்த அம்மையார் முடித்தார்.

இதை மறுத்து மாதவி சார்பில் திரு. நமசிவாயம் வாதாடினார். ''கோவலன் பலகாலம் வாழ்ந்தது மாதவியிடம்தான். இது அவர்களின் அன்பின் பிணைப்பைத்தானே காட்டுகிறது. நடைமுறைக்கேற்ப வாழ்ந்தவள் மாதவி. கண்ணகி ஒரு தெய்வப் பிறப்பு.

கண்ணகி பிறப்பால் மாசுபடாத சமூகத்தைச் சேர்ந்தவள். அதனாலேயே இயற்கையில் வந்த உயர்வைப் பெற்றவள். அவளுடைய சூழ்நிலையில் [மனைவி என்ற சூழ்நிலை] அவள் கோவலன்பால் காட்டிய அன்பு பொதுவானது.

[illegible] மாதவிதான் பிறந்த குலத்தின் சூழ்நிலையில் கோவலன்மீது காட்டிய அன்புதான் மிகச் சிறப்பானது. மாதவிக்கு இன்னு[ம்]
சிலை எழுப்பாதது ஒரு குறை
யாகும்'' என்று அவர் கூ[றி]
னார்.

மாதவியை கோவல[ன்]
பிரிய நேர்ந்தது ஊழ்வினை
யின் காரணமாக ஏற்பட்ட
தென்றார்.

### சேரன் முதல்
### தி. மு. க. வரை

அடுத்துப்பேசிய ஸ்ரீ மு
அண்ணாமலை, சேரன் செ
குட்டுவன் காலத்தில் இ
ந்து இன்றையதினம் தி. மு
க. வரை எல்லோரும் சி
யெடுத்திருப்பது கண்ண
கிக்கு தவிர மாதவிக்
அல்ல.

மாதவி முடிவில் துற
யானாள். ஆனால் கண்ண
தெய்வமானாள். கோவல
மீது மாதவிக்கு பிரவா
மான அன்பைச் சொரி
தாள் என்பது உண்மை
தான். ஆனால் அதுவே த
ாகப் போய்விட்டது. மா
வியின் அன்பினால் அவ
செயல் இழந்துபோனான்
ஆனால் கண்ணகியிட
காணப்பட்ட அன்பு ஆக்
பூர்வமானதும், கட
யுணர்ச்சியும் கொண்டு ந
நிலைமையில் கோவலன் இ
டுச் சென்றது. ஆகவே க
ணகியின் அன்பே உய
வான அன்பாகும் என்
கூறினார்.

### அன்பு எது?

இக்கூற்றை மறுத்
''மாதவி கட்சி'' ஸ்ரீ ம
காமாட்சி குமாரசாமி பே
யதாவது:

''ஊடலும் கூடலு
கொண்டதே அன்பு வா
க்கை. அந்த வாழ்க்
யைத்தான் மாதவி கோவ
னுக்குக் கொடுத்தாள்
ஆனால் கூடலையே அறியா
வள் கண்ணகி. ஆகையா
மாதவியின் அன்பே சிறந்
தாகும்.

கண்ணகிகட்சி ஸ்ரீ ச
தியசீலன் இதற்குப் ப
லளித்தார். அவர் கூறி
தாவது:

''கண்ணகி எதைப் பார்
தாலும் அதில் கோவலனை
தான் பார்த்தாள்
கோவலனால் தனக்
இன்பம் கிடைக்கவில்லை
என்று கடவுளிடம்கூட க
ணகி முறையிட்டுக் கொ
டாள் அல்ல. அது மாத்தி
மல்ல. எங்கே தனக்கு இன்
மாக இருக்கிறது என்
நினைத்து, தன் கணவ
கோவலன் கருதி தங்கி
யிருக்கிறானோ அங்கே
தங்கி] மாதவியின் வீட்டில்
தன் கணவன்சந்தோஷமா
இருக்க வேண்டும் என்
தான் கண்ணகி நினைத்தாள்
ஆகவே கண்ணகியினுடை
யதுதான் உண்மையா
அன்பு.''

அடுத்து ஸ்ரீ மி. சா. ந
சன் பேசுகையில், தனக்கு

[இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி நடைபெற்ற கவிதைப்போட்டிக்கு ஆயிரத்துக்குமேற்பட்ட கவிஞர்கள் கவிதை அனுப்பியிருந்தனர். ''பூம்புகாரில் ஒருநாள்'' என்ற தலைப்பில் இப்போட்டி நடைபெற்றது. யாழ்ப்பாணத்துக் கவிஞர் இ. நாகராஜன் கவிதை சான்றிதழ் பெறும் கவிதையாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதுதான் அந்தக் கவிதை.

## பூம்புகாரில் ஒருநாள்

— இ. நாகராஜன் —

### தமிழ் வாழ்த்து:

முன்னைய மொழிகட் கெல்லாம் மூத்து பேர்
முதிர்ச்சி யுற்று
பின்னைய மொழிகட் கெல்லாம் பிறப்பிடம்
அருளிப் பேணி
இன்னிலத் திளமை குன்று எழிலுடன்
இலங்கு மென்றன்
அன்னையே தமிழே! அன்பாய் அகத்திருந்
தருள்க நன்றே.

### என் கனவு:

பண்டுலகில் புண்பினிலே பழுத்துப் பாங்கிற்
பக்குவத்தில் மூத்ததமிழ் முந்தை யோரைக்
கண்டுவரக் காதலுற்றேன் கால ஆற்றைக்
கடக்கவழி காடடவல்லார் எவரு மில்லை
வண்டியதன் சகடமென நாட்கள் ஓடி
மாதமென மாறிப்பின் வளர்ந்தும் உள்ளம்
கொண்டபெரும் ஆவலது குன்று தென்றும்
குறியதனை அடையுநெறி தேட லானேன்

தேடிப்பல் லாண்டாகத் தெளிவேயின்றிச்
சித்தமது சோர்வுற்றே இருந்த காலை
பீடமைந்த சிலம்பென்ற ஏட்டைக் கண்டேன்
பெற்றிமையும் நற்றிறனும் பொருந்தச் சோழ
நாடதனில் காவிரிப்பூம் பட்டி னத்தில்
நல்லியலார் நந்தமிழர் வாழும் செய்தி
வீடதனை நாடதனை மறக்கச் செய்ய
விண்முகிலைத் துணைகொண்டு விரைய லானேன்.

படர்ந்துவிரி பாரகத்தே பரமன் பாதம்
பற்றவுளம் உற்றதனால் பக்தி யோடு
திடமொன்று சித்தனென உயர்ந்து கொண்டற்
திரைசூடி எழில்காட்டும் சிறப்புப் பெற்ற
குடமலையைக் கண்டதனின் சென்னி மீது
குந்தியுள வேளையிலே தமிழ்ப்பாப் பாடி
நடமாடி ஒருநதிப்பெண் ஒயிலாய்ப் பாய்ந்து
நடக்கின்றாள் அவளுடனே தொடர லானேன்.

காவிரியாம் அவள்பெயரும் அவள்கால் பற்றி
காடுமலை கழனிபல கவினார் ஏரி
பூவிரிந்த காவுயர் புன்னை தென்னை
பொலிதோப்பு பலகண்டு புதுமை பூக்கத்
தாவியவள் செல்லுகிற திசையைச் சார்ந்து
தயங்காது நடக்கின்றேன் அந்தப் பெண்ணும்
ஆவியுடன் ஆகமதை உவந்தே ஈந்தாங்
காழியெனும் தேவனுடன் ஐக்ய மானாள்.

காவிரியும் கடலுமொன்று கரையில் நெஞ்சைக்
கவர்ந்துகவின் காட்டுவதாய்க் கலைகள் மேவி
பூவினிலே பொலியும்பூம் புகாரை மேன்மை
பூத்தொளிரும் சீரமைந்த தமிழர் தம்மை,
நாவினிக்க நெஞ்சினிக்க சங்கம் காத்த
நாடகமும் இயலிசையும் நனிதே ஓங்க
பாவினிக்க இளங்கோவன் செய்த பெற்றிப்
[illegible]மைய வாழுகிற சிறப்புக் கண்டேன்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி லே ... ண்டும்”

ஆகிய பன்னிரு புலவர்களைக் குறித்து முறையே ஸ்ரீமதி அரசு மணிமேகலை, ஸ்ரீமான்கள் சி. பாலசுப்பிரமணியம், தி. க. கலியபெருமாள், தொல்காப்பியன், புலவர் மருதவாணன், மின்னூர் சீனிவாசன், கவிஞர் ப்பகன், எஸ். கே. எஸ். சாகுல்ஹமீது, பத்திநாதன், புலவர் ஹுசேன், சி. இளங்கோவன், ஔவை நடராசன் ஆகியோர் கவிதை புனைந்து வந்து பாடி மகிழ்வித்தார்கள்.

கவியரங்கத்திற்கு கவிஞர் முடியரசன் தலைமை வகித்தார்.

### வெள்ளையரைக் கவர்ந்தகுறள்

இவ்விழாவில்எதிர்பாராத விதமாக, ஸ்விட்லர்லந்தைச் சேர்ந்தவரும், தமிழார்வமிக்கவருமான ஸ்ரீ கார்ல் கெல்லர் என்றவெள்ளைக்காரர் பேச முன்வந்தார். அவர் திருமுருகாற்றுப்படையை பிரஞ்சுமொழியில் மொழிபெயர்த்திருக்கிறார். தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களையும் பிரஞ்சுமொழியில் மொழிபெயர்க்கும்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

அவர் பேசுகையில், "செயற்கரிய செய்வார் பெரியார்; சிறியர் செயற்கரிய செய்யாதார்" என்ற குறள்பாட்டு தன்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டதென்றும், ஒருவன் எவ்வாறு உயர்ந்த வாழ்க்கையை வாழவேண்டுமென்பதைஇக்குறள் வரிசை எடுத்துக் காட்டுவதுபோல், வேறுஎந்த மொழியிலும் தான் படித்ததில்லை என்றும் கூறினார்.

ஆரம்பத்தில் ஸ்ரீ மன்னை பரமசிவத்தின் நாயன இசை நடைபெற்றது.

### "காணிநிலம்" ஓவியம்

உலகத்தமிழ் மகாநாடு கலைக்காட்சியில் உள்ள "காணிநிலம் வேண்டும்" என்ற வண்ண ஓவியம் ஸ்ரீ வி. எம். பிள்ளை தீட்டியது. 'தினமணி' 5—9—1968 இதழில் இப்படம் வேறுஒருவரால் வரையப்பட்டதாக குறிப்பிடப் பட்டிருந்தது தவறு.

பிறந்த குழந்தையான மணிமேகலையைக்கூட கண்ணகியின் குழந்தையென்றே மாதவி உளமாரக் கூறுகிறாள். இது அவள் கோவலன் மீதும் கண்ணகிமீதும்கூட வைத்திருந்த அன்பைக்காட்டுகிறது. இது ஒன்றேபோதுமானது மாதவியின்மாசற்ற அன்பை எடுத்துக் காட்ட என்றார்.

இவ்விவாதத்தை ஜனத்திரள் வெகுவாக ரசித்து கரகோஷம் செய்தது. தலைமைவகித்த பேராசிரியர் ஸ்ரீ இராசாக்கண்ணனார் பட்டிமன்றத்தை முடித்துப் பேசுகையில் சிலப்பதிகாரத்திலும், தமிழ் இலக்கியத்திலும் கண்ணகியும் மாதவியும் இரண்டு கண்களை ஒத்த கதாபாத்திரங்களாகும் என்றார்.

### கவியரங்கம்

அடுத்தபடியாக கவியரங்கம் நடந்தது. பன்னிருபுலவர்களைக் குறித்துப் போற்றிப்புகழ்ந்து கவி புனைந்து கொண்டு வந்து பல புலவர்கள் பாடினார்கள்.

ஔவையார், வள்ளுவர், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர், ஏட்டக்கூத்தர், புகழேந்தி, செயங்கொண்டார், உமறுப் புலவர், திரிகூடராசப்பகவிராயர், வடலூர் வள்ளலார்

# தமிழ்த் தேன் சொட்டுகிறது

## இன்றைய பலன்

[9-1-68]

செவ்வாய்க்கிழமை

மார்கழி மீ 25 வ.

நட்சத்திரம்- அக்சுவினி பகல் 2-31 மேல் பரணி.

திதி-நவமி பகல் 1-19 மேல் தசமி.

சுப நேரம்- 11-02—12-32.

ராகுகாலம்-3-32-5-02

மேஷம்- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

ரிஷபம் - திடீர் திருப்பம், திரவியலாபம்.

மிதுனம்-ஏக்கத்தின் சாயல், ஏமாற்றமுண்டு.

கடகம் - தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.

சிம்மம்-உள்ளத்தில் உவகை, உற்சாகமிகுதி.

கன்னி-ஆயுதபலம். அவசரம் வேண்டாம்.

துலாம்- துளிர்விடும் காதல், ஒளிதரும்வாழ்வு.

விருச்சிகம் - வணிக முடக்கம், வாழ்வில் சோர்வு.

தனுசு-பாக்கியவிருத்தி, பரம்பொருள் நினைப்பு.

மகரம்- உத்தியோக நலன், உறவும்சேரும்.

கும்பம்-புதல்வர்கள் உதவி, பூரணஅமைதி.

மீனம் - முன்னேற்றம் தடைப்படும், மோனநிலை

— சோதிடக்கலாநிதி —

**திருமலை வேலுப்பிள்ளை**

வானொலி என்று சொல்லப்படும் றேடியோவைக் கண்டுபிடித்த மார்க்கோனியை இவர் பல சமயங்களில் வாயாரத் திட்டியதுண்டு. சிலசமயம் நாவார வாழ்த்தியதுண்டு.

கடைத்தெருவில் நடந்து செல்லும்போது நாலைந்து தேநீர்க் கடைகளிலிருந்து ஏககாலத்தில் வந்து காதில் நாராசம் பொழிந்தபோதும் இரவிரவாகத் தூக்கத்தைக் கலைத்து அபலயமாக ஊளையிட்டபோதும், மார்க்கோனியை மனம்போன போக்கில் திட்டுவார். இது அநேகமாகத் தினந்தோறும் நடைபெறும் நிகழ்ச்சி.

ஆனால் ஆண்டுக்கொரு நாளாவது மார்க்கோனியை மதிப்பு உண்டா என்று ஆச்சரியப்பட்டோம். திருக்குறளையும், திருமுருகாற்றுப் படையையும் பிற மொழிகளில் பெயர்த்த பேரறிஞர்களின் அனுபவங்களைக் கேட்டுப் பெருமைப்பட்டோம்.

ரஷ்யரும், அமெரிக்கரும் கன்னித் தமிழ் பேசுவதைக் கேட்டு நெஞ்சம் கிளுகிளுத்தது. 'செமபியன்' என்ற தமிழ்ப் பெயரை அணிந்துள்ள அந்த ரஷ்யர் அனுவேனும் பிழையில்லாமல் தமிழில் பேசியபோது நெஞ்சம் கிளுகிளுத்தது மட்டுமல்ல, உள்ளம் குன்றிக் குளுவிப்போய்விட்டது. எமது நாட்டிலுள்ள சில பெரியார்கள் எப்பொழுது

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

மனப்பூர்வமாக வாழ்த்தக்கூடிய சம்பவங்களும் றேடியோவில் நிகழ்வதுண்டு.

இவற்றில் ஒன்றுதான் சென்னையில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு.

கடந்த சில தினங்களாக இப்பேரவையில் நிகழும் பேச்சுக்களையும், கருத்தரங்குகளையும், கவியரங்குகளையும் சென்னை வானொலிநிலையம் அழகாக 'எடிட்' பண்ணித் தொகுத்து, அந்தக் கண்கொள்ளாக் காட்சிகளையும், செவிகொள்ளாச் சொற்பொழிவுகளையும் நேரில் கண்டும் கேட்டும் நுகரமுடியாதவர்களுக்கு, கண்ணில்லாத திருதராஷ்டிரனுக்கு சஞ்சயன் பாரதப்போரை வர்ணித்தது போல எமக்குத் தெளிவாகத் தந்துதவுகிறது.

தமிழைத் தாய்மொழியாகக்கொண்டவர்கள் மட்டுமல்லாமல் பிற மொழியாளர் தமிழைக் கிளி மொழிபோல் பேசுவதைக் கண்டு இறுமாந்தோம். தமிழுக்கு இவ்வையகத்தில் இவ்வளவு

இம்மாதிரித் தமிழ் பேசப்போகிறார்கள் என்று ஏங்கியது உள்ளம்.

குறளையும், தொல்காப்பியத்தையும், ஆழ்வார்களையும், நாயன்மார்களையும், பல்லவரையும், சோழரையும், மாமல்லபுரத்தையும், பூம்புகாரையும், பாரதியையும், கம்பனையும் பற்றி நாம் அறியாத எத்தனையோ விஷயங்களை ஒரு வட இந்தியர், அதுவும் ஓர் இஸ்லாமியருமான இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ஜாகீர் ஹுசேன் எடுத்தியம்பியபோது மகிழ்ச்சி, பெருமிதம், ஆச்சரியம் இவை ஒன்றுசேரப் பொங்க, தமிழனாகிய நான் இதையெல்லாம் எப்பொழுது அறியப்போகிறேன் என்று நெஞ்சம் ஒடுங்கியது.

பல்வேறு இடங்களில் நிகழும் பல்வேறு மாநாட்டு நிகழ்ச்சிகளை அழகுறத் தொகுத்து வெளியிட்ட சென்னை வானொலி நிலையத்தாரை மனமார வாழ்த்த வேண்டும்.

இன்று சேர். பொன் அருணாசலம் நினைவு தினம்

# வேறுபாடின்றி நாட்டுக்கு உழைத்த பெரியார்

சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் பெயர் இலங்கை அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட தேசிய வீரர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அன்னாரின் அளப்பரிய சேவைகளையும் அவர் ஆற்றிய சமூகத் தொண்டுகளையும் எடுத்துக் காட்டுவதாக இது அமைந்துள்ளது. சேர் பொன்னம்பலம் அருணாசலம் தனது சமூகத்தவருக்குமாத்திரமல்லாது இலங்கையர் என்ற அடிப்படையில் பல சமூகத்தவர்களுக்கும் சாதி, சமய வேறுபாடின்றி உழைத்து வந்த காரணத்தினாலேயே இன்று இவரது புகழ் உயர்ந்துள்ளது.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை சட்ட சபைக்குச் சென்று தேச சேவையாற்றிப் பெரும்புகழீட்டிய மூன்று சகோதரர்களுள் இளையவர் இவரே. துணிவும் சுயாதீனமான கொள்கையும் வாய்ந்த இவரது மூத்த சகோதரர் திரு. குமாரசுவாமி அவர்கள் சிறந்த தேசப்பற்றுடன் சேவையாற்றி 1906-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இன்று இவர் புகழ் அதிகம் துலங்குவதற்கு காரணம் இவருக்குப்பின் இராமநாதனும் அருணாசலமும் ஈட்டிய பெரும் புகழேயாம்.

சிறிய காலத்திற்குள்ளேயே அருணாசலம் தமது திறமையை விளக்கி பவுண்டேஷன் கல்விச் சகாயநிதியைப்பெற்று புராதன இலக்கியங்களிலும் கணித சாஸ்திரத்திலும் வல்லுநராகிப் பெரும் புகழை ஈட்டினார். மாணவர்வரிசையில்சாமர்த்தியமுற்ற கணித சாஸ்திர நிபுணரும் புராதன இலக்கிய அறிஞனும் என அருணாசலம் அவர்களை பலர் விவரித்தார்கள்.

சிவில் சர்வீஸ் சோதனையில் முதன்முதலாகச் சித்தியடைந்த இலங்கையர் அருணாசலம அவர்களே. 1875-ம் வருடம் ஏப்ரல் மாதம் இலங்கை திரும்பிய பின்னர் அவர் கொழும்பிலுள்ள அரசாங்க மாகாண அதிபதி காரியாலயத்தில் நியமிக்கப்பட்டார். இவர்பதவி ஏற்ற நாள்தொடக்கம் நிர்வாகத் திறமையுடன் உழைத்துவரலானார். அப்பொழுது பிஸ்கால் இலாகாவில் பல ஊழல்களும் லைஞ்சமும் தாண்டவமாடின. ஊழல் நீக்கி சீர்திருத்தம் செய்யும் நோக்கத்துடன் அருணாசலம் இருஇலாகாக்களையும்மாற்றி அமைக்கும்படி ஆலோசனை கூறினார். பல பதவிகளை வகித்த திரு. அருணாசலம 1913-ம் ஆண்டில் சிவில் சர்வீஸ் உத்தியோகத்திலிருந்தும் இளைப்பாறினார். 1919-ல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸின் முன்னேற்றத்துக்காக தலைமைப்பதவியை ஏற்ற திரு. அருணாசலம் பல வழிகளில் சேவைசெய்தார்.

பல மதக்கருத்துக்களையும் தத்துவ ஞானக் கொள்கைகளையும் கொண்டிருந்த போதிலும் வைதீக சைவராகவே விளங்கினார் 1923ம் ஆண்டின் கடைசியில் இந்தியாவிலுள்ள புனித ஸ்தலங்களுக்குச் சென்ற சேர் பொன் அருணாசலம் 1924-ம் ஆண்டு இறைவன திருவடி நிழலை எய்தினார்.

மாவிட்டபுரம்

## அதிசயக் கிணறை ஆராய்க

அளவெட்டி, திங்கள்

மாவிட்டபுரத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயக் கிணற்றை நீர்ப்பாசன பொறியியலாளரைக் கொண்டுஆராய்ந்து இப்பகுதி விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரும்படி பழைய வீமன்காமம் பயிர்ச்செய்கைக் குழு நீர்ப்பாசன இலாகாவையும் வலி—வடக்கு காரியாதிகாரியையும் கேட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு

# இதுவரை ரூ. 1 லட்சம் வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செவ்.

வடமாகாணத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மழை, வெள்ளம், பேய்க்காற்று ஆகியவற்றால்வீடுகளையும்பொருட்களையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு சமூக சேவைப் பகுதி இதுவரை ஒரு லட்சம் ரூபாய்வரை வெள்ள நிவாரண நிதியாக அவித்துள்ளதாக யாழ்ப்பாண சமூக சேவைப்பகுதி உதவிடைரக்டர் திரு. என். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

வெள்ள நிவாரண நிதி வழங்கும் வேலையை சமூக சேவைப்பகுதி மிகவும் துரிதமாகச் செய்துகொண்டிருக்கின்றதென்றும் எதிர்வரும் தைப்பொங்கல் பண்டிகைக்குமுன் சகலருக்கும் நிவாரணம் வழங்க சமூக சேவைப் பகுதி முயற்சிசெய்துகொண்டிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை நிவாரணப் பணம் பெற்ற இடங்களும், பெற்ற பணத்தொகைவிபரமும் வருமாறு: கோப்பாய் தெற்கு ரூ. 6.730, இணுவில் ரூ. 18,035, ஏழாலை ரூ. 13,505, சிறுப்பிட்டி ரூ. 4,200, பருத்தித்துறை ஈற் கோவிலடி ரூ. 1,220, சரசாலை ரூ. 830, மறவன்புலவு ரூ. 1,085, தனங்கிளப்பு ரூ. 225, கச்சாய் ரூ. 4,680, குருநகர் ரூ.945.

(வி. நி.)

சுருட்டுத் தொழிலாளர்

## சம்பள உயர்வு உறுதிப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்ட சுருட்டுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 100 சுருட்டுக்கு 13 ரூபா வீதமான சம்பள உயர்வு நிரந்தரமாக உறுதிப்படுத்தப் படுவதற்கு சம்பள நிர்ணய சபையுடன் தொடர்பு கொண்டு அதைச் சட்டபூர்வமானதாக்கப்பட வேண்டும்.

தொழிற்கந்தோர் அதிகாரி திரு. மேதர் தலைமையில் நடைபெற்ற வடமாகாண சுருட்டுத் தொழிலாளர் மகாநாட்டில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [வி. நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் தற்கொலை

## குடும்பத் தகராறு காரணமாம்

யாழ்ப்பாணம், செவ், தன் மனைவி தான் இட்ட கட்டளையை உடன் நிறைவேற்றத் தவறி விட்டதற்காக குடிபோதையில் இருந்த ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நீர்வேலி தெற்கில் நடைபெற்றது.

மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடத்தினார். தற்கொலை செய்துகொண்ட 45 வயதான சுவாமிநாதர் இராசா என்பவரின் 2-ம் மனைவியான இலட்சுமி அம்மா மரணவிசாரணையின் போது சாட்சியமளித்தார்.

இறந்தவர் மது அருந்துபவரென்றும் தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வருவாரென்றும் சம்பவம் நடந்த தினம் அவர் வீடு திரும்பும் போது தான் வீட்டுவேலை செய்து கொண்டிருந்ததாகவும், அப்பொழுது அவர் தனக்கு சுடுதண்ணீர் வைத்துத் தரும்படி கேட்டதாகவும், சுடுதண்ணீர் வைத்துக் கொடுப்பதற்குள் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி மீண்டும் வரும்போது குடித்துவிட்டு வந்து தலைவாசலில் உள்ள வைக்கோல் கற்றைக்குள்ளிருந்து ஒரு சிறு போத்தலிலிருந்த கிருமிநாசினியை அருந்தினாரென்றும் இலட்சுமி அம்மா தெரிவித்தார். மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (வி. நி.)

## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, திங். குருநகர் நெய்தல் வளர்பிறை மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. பி. கிறேஷியன் தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் வில்லராயர், நீலன், தலைவர்: திரு. செ. கிறிஸ்தோத்திரம், உபதலைவர்: திரு. சி கிறிஸ்தோப்பர், காரியதரிசி: திரு, எஸ். கொன்சன்ரைன், உபகாரியதரிசி: திரு. கி. இராசநாயகம், தனாதிகாரி: திரு. ம. இங்ஸ்லி. ஐவரடங்கிய நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

புதுக்குடியிருப்பு, ஞாயிறு புதுக்குடியிருப்பு கல்விகற்றோரின் படிப்பக நிலையம் கிராமசபைத் தலைவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலயத்தை இயக்குவதற்கு பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. பரமலிங்கம், காரியதரிசி திரு. இ. இரத்தினசிங்கம், தனாதிகாரி திரு. சி. சுப்பிரமணியம். ஆறுபேரைக்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

இமையாணன். திங்கள் தலைமன்னார் பியரில் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிய இமையாணனைச் சேர்ந்த திரு. சி. நாகேந்திரம் மருதானை புகையிரத நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் புகையிரத நிலையத்தில் புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றிய திரு. யோகரத்தினம் தலைமன்னார் பியருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

வன்னியில்

## மீண்டும் சோதனை நடக்கிறது

இமையாணன், ஞாயிறு மீண்டும் வல்லை, தொண்டமனாற்றுப் பாலங்களில் வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டுவருகின்றன. நேற்றுத் தொடக்கம் இவ்விடங்களில் துப்பாக்கியுடன் பொலிசார் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

## முத்திரை இல்லை

சுழிபுரம், திங்கள் பண்ணாகம் உபதபாற் கந்தோரில பத்துச்சத முத்திரைக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பத்துச் சதத்துக்குப் பதிலாக நாலுசத முத்திரை இரண்டும் இரண்டுசத முத்திரை ஒன்றும் பொதுமக்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

## ஊறணி வென்றது

காங்கேசன்துறை, திங்கள் மயிலிட்டி வள்ளுவர் கழகத்திற்கும் ஊறணி இளைஞர் கழகத்திற்குமிடையில் கட்டுவன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஊறணி இளைஞர் கழகம் 2-1 கோல்களால் மயிலிட்டி வள்ளுவர் கழகத்தைத் தோற்கடித்தது.

## லண்டன் செல்கிறார்

இமையாணன், திங்கள் இமையாணனைச் சேர்ந்த திரு. கு. சிதம்பரநாதன் இம்மாதம் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காக செல்கின்றார். இவர் அங்கு நான்கு வருடகாலம் ரேடியோ சம்பந்தமான கல்வி பயில்வார். இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவராவார்.

50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

1968 ஜனவரி 25-ந் திகதி 178வது சீட்டிழுப்பு மீரிகமையில் வைத்து நடைபெறும்

1-வது பரிசு ரூ. 100,000/- அல்லது புத்தம் புதிய அஸ்டின் 1800ம் ரூ. 77,000/- பணமும் X



2-வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய அஸ்டின் 1100ம் ரூ. 26,000/- பணமும் X



3-வது பரிசு ரூ. 10,000/- அல்லது புத்தம் புதிய மகோமிக் இன்டர் நாஷனல் டி-275 ட்ராக்டர் (மெஸர்ஸ் த சிலோன் சேர்விஸஸ் சப்ளைஸ் கம்பெனி லிமிட்டெட்டின் உபசரணையுடன்) விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலையான ரூ. 10,000/-க்கு வழங்கப்படுகிறது.



X இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனி பட்டியல் விலைக்குக் குறைந்ததாகும்.

100 ஆறுதல் பரிசுகள்:

கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1485-20 பரிசு பெற்றார்கள்.

இந்தக் கார்கள், வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்ற வாசிகளுக்கு கிணறுவெட்ட 1500 ரூபாய் அரசாங்கம் வழங்கும்

## அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் தகவல்

உடுவில், திங்கள்

**அரசாங்கத்தில் நிலம்பெற்ற வறிய விவசாயிகளுக்கு — கொலனி வாசிகளுக்கு — புதியதோர் சலுகை கிடைத்திருக்கின்றது. தங்கள் தங்கள் காணிகளில் கிணறுவெட்டி அரைஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள காணிகளில் உபஉணவுப் பொருட்கள் பயிர் செய்வதற்கு உதவியளிக்கும் நோக்கமாக அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் நன்கொடைப் பணமாக ரூபா 1500 வழங்குவதென முடிவு செய்திருக்கின்றது.**

இப்புதிய திட்டத்தைத் திறமையாக அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் நோக்கமாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவினல் நேற்றுக் கூட்டப்பட்ட ஓர் மகாநாட்டில் மேற்கண்ட திட்டம் வெளியிடப்பட்டது. யழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க செயலகத்தில் கூட்டப்பட்ட இம்மகாநாட்டிற்கு திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை வகித்தார்.

குடியேழறத்திட்ட வாசிகளுக்கு வழங்கப்படவிருக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் தமது காணியில் கிணறுவெட்டி அரை ஏக்கர் நிலத்திற்குக் குறையாமல் உபஉணவுப பொருட்களைப் பயிரிடல் வேண்டும். இத்திட்டத்தின்மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உப உணவுப் பொருட்கள் அபிவிருத்தியைப் பலமடங்கு பெருக்கி, அகில இலங்கைக்குமே இப்பொருட்களை விநியோகம் செய்யத்தக்க வசதி ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாண மக்கள் தற்போது சின்னவெங்காயத்தைப் பெருந்தொகையாக உற்பத்திசெய்து அகில இலங்கைக்கும் வேண்டிய முழுத்தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் இருப்பதனல் லட்சக்கணக்கான ரூபாய் யாழ்ப்பாணத்திற்கு வருடாவருடம் வந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் இப்புதிய திட்டத்தை நன்கு உபயோகப்படுத்தினல் உருளைக்கிழங்கு, பம்பாய்வெங்காயம், பயறு, நிலக்கடலை முதலியபொருட்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலே உற்பத்திசெய்யப்பட்டு பிற இடங்களுக்கு அனுப்பமுடியும். இதனல் இன்னும் மேலதிக லட்சக்கணக்கான ரூபாவை யாழ்ப்பாண மக்கள் பெறக்கூடியதான வசதி ஏற்படும்.

இப்புதிய திட்டத்தைச் சிறந்த முறையில் அமுல் நடத்துவதென்றும், மாசிமாதம் முடிவதற்கு முன்னர் இந்த அரசாங்க நன்கொடைப் பணத்தைப்பெற விரும்பும் விவசாய மக்கள் அவ்வப் பகுதி காரியாதிகாரிகளிடம் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் நேற்றைய மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 13 போத்தல் வடிசாராயம் கைப்பற்றப்பட்டது

உடுவில், திங்கள்

பதின்மூன்று போத்தல் வடிசாராயம் கொண்டு சென்றதாகக் கூறப்படும் ஒரு நபரை, நேற்று முன்தனம் சுன்னுகம் பொலிஸார் மல்லாகத்தில் வைத்துக் கைதுசெய்தனர்.

மல்லாகம் சந்திக்கு அண்மையில் சேவையிலீடுபட்டிருந்த சுன்னுகம் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. ஜயவர்த்தன, வடிசாராயம் கொண்டு சென்றதாகக் கூறப்படும நபரைச் சந்தேகத்தின்மீது வழிமறித்துச் சோதனையிட்டபொழுது அவரிடம் பதின்மூன்று போத்தல் வடிசாராயம் இருக்கக்காணப்பட்டதாம்.

கள்ள வடிசாராயம் கொண்டுசென்ற குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்ட பிராம்பத்தையைச் சேர்ந்த கந்தையா துரைசிங்கம் என்னும் மேற்படி நபர் தற்சமயம் சுன்னுகம் பொலிஸாரால் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## ''பஸ் சேவையை விஸ்தரிக்குக''

சங்கானை, திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து அளவெட்டியூடாகச் சங்கானை செல்லும் இ. போ. ச. சேவையில் ஒரேயொரு பஸ் மட்டும் ஈடுபட்டுள்ளதுடன் சாவகச்சேரி - சங்கானை இ. போ. ச. சேவையும் சில சமயங்களில் ஸ்தம்பித்துவிடுவதால் சுன்னுகம் சங்கானை போன்ற சந்தைகளுக்குச் செல்லும் கமக்காரர்களும் பாடசாலை மாணவர்களும். உத்தியோகஸ்தர்களும் நேரத்திற்குச் செல்லமுடியாத நிலையை அடைந்துவருகின்றனர் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய மேலும் சில பஸ்களைச் சேவையிலீடுபடுத்த வேண்டுமெனச் சங்கானைப் பட்டினசபைத்தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் யாழ்ப்பாணப் பிராந்திய இ. போ. ச. அதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் விளக்கியுள்ளார்.

## நோயாளிகள் அதிருப்தி

சாவகச்சேரி, திங்கள்

கைதடி — நாவற்குழி அரசினர் கிளை வைத்திய சாலைக்கு கடந்த சனிக்கிழமை மருந்துபெறச்சென்ற நோயாளிகள் டாக்டர் வராமையால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சனிக்கிழமை போயாதினத்திற்கு முன்தினமாக இருந்தபோதிலும் டாக்டர் வரும் தினமாக தெரிக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து நோயாளிகள் பலர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## நாவலர் வெற்றி

சங்கானை, திங்கள்

வலி-மேற்கு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இளவாலை சென். ஹென்றி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விளான் சன்ரைஸ் விளையாட்டுக்கழகமும் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இறுதிவரை நடைபெற்ற பலத்த மோதலில் நாவலர் கழகம் 3-2 கோல்களைப் போட்டு வெற்றியீட்டி பி பிரிவில் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டதுடன் இறுதிப் போட்டியான சாம்பியன் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெறுவதற்குக் கடும் பயிற்சியில் ஈடுபட்ட போட்டிக்கு சங்கானைப் பொலிஸைச் சேர்ந்த திரு. எஸ். கே. சந்திரரத்ன மத்தியஸ்தம் வகித்தார்.

## சில்வஸ் ஸ்ராஸ் வெற்றி

சுழிபுரம், திங்கள்

அராலி சில்வஸ் ஸ்ராஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், அராலி சரஸ்வதிகோஷ்டிக்குமிடையேநடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அராலி சில்வஸ் ஸ்ராஸ் கோஷ்டியினர் 7—0 கோல்களைப்போட்டு அமோக வெற்றி பெற்றனர். போட்டி அராலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மத்தியஸ்தராக வலிகாமம் மேற்கு உடற் பயிற்சி உத்தியோகத்தர் திரு. கா. அரிச்சந்திரா கடமையாற்றினர்.

## அரையில் தந்திக்கம்பி பொலிஸிடம் அகப்பட்டார்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பறுளைச்சந்திக்கு அருகாமையில் ரோந்து சுற்றிய பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் விக்ரோறியாக் கல்லூரி முன்றலில் வைத்து ஒருவரை கைது செய்தார், சில்லாலைக் கிராமத்தைசேர்ந்த மீன்பிடியாளரான அந்நபர் தனது அரையில் தந்திக்கம்பிகளைசுற்றிமறைத்து வைத்திருந்தாராம். இவருடைய நடத்தையில் சந்தேகம் கொண்ட பொலிஸ்உத்தியோகஸ்த்தர் அவரைமறித்து பரிசிலனை செய்துவிசாரித்தபோதே மறைத்து வைத்திருந்தகமபிகள்கண்டு பிடிக்கப்பட்டனவாம். பொன்னலை பகுதியிலிருந்து இக்கம்பிகள் அறுக்கப்பட்டதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சங்கானைப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்கின்றனர்.

## புதிய வாசிகசாலை

அளவெட்டி, திங்கள்

பழைய வீமன்காமம் கூத்தியவத்தைப் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தின் ஒரு பகுதியில் அண்மையில் ஒரு வாசிகசாலை திறக்கப்பட்டது.

அதிவிரைவில் இம் மண்டபத்தின் ஒரு பகுதியில் நெசவுநிலையம் ஒன்று அமைக்க ஏற்ற-நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராம முன்னேற்றச் சங்கம் இதற்குவேண்டிய உதவிகளைப் பெற இதுசம்பந்தமான அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

'உருளைக்கிழங்கு

## விதை உடுவில் விவசாயிகளுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை'

### உடுவில்கி.ச. தலைவர்அரசாங்க அதிபருக்குபுகார்

யாழ்ப்பாணம், செவ்.

உடுவில் கிராமசபைப் பகுதியில் வசிக்கும் விவசாயிகளின் உருளைக்கிழங்குப் பயிர் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக முற்ருக அழிந்துவிட்டதெனவும் அதன் காரணமாக விவசாயிகளுக்கு பெரும் நஷ்டமேற்பட்டுள்ளதெனவும் உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; மார்கழி 5-ம், 6-ம் திகதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக உடுவில் பகுதியில் உருளைக்கிழங்குப்பயிர் முற்ருக அழிந்துவிட்டது. அரசாங்கம் இதற்கு நஷ்டஈடாக உருளைக்கிழங்கு விதையை இலவசமாகத் திருப்பிக் கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் இதுவரை காலமும் எதிர்பார்த்திருந்தார்கள். இன்றுவரை இது சாத்தியமாகவில்லை. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விதைகிழங்கை விவசாய இலாகாவிடம் வாங்கி தமது அங்கத்தவர்களுக்குக் கடனுக வழங்க முன்வந்தது. அதற்கும் அரசாங்கம் உருளைக்கிழங்குவிதை கொடுக்கவில்லை என அறிகிறேன். இதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் அக்கறைபற்றிருந்தால் உணவுபற்றுக்குறையை நீக்க எடுக்கும் முயற்சியிலிருந்து அரசாங்கம் தவறிவிட்டதென்றே கருத வேண்டியிருக்கும்.

## கி. மு. சங்கம் மகஜர்

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கத்தினர் அனலைதீவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசபிள்ளையிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தனர். கி. மு. சங்கத் தலைவர் திரு. யோகராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் காரியதரிசி திரு. சு. தயாபரராசாவால் மகஜர் வாசிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. தீவுப்பகுதிக் காரியாதிகாரியும் [illegible] கொடுத்திருந்தார்.

அனலைதீவுக்கு நிரந்தர [illegible] விசாரணை அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமெனவும் புளியந்தீவு பால வேலைக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டுமெனவும், குடியேற்றப் பகுதிகளுக்கு ஒழுங்கைகளை [illegible] மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் மகஜர் கோரப்பட்டுள்ளது.

## ''பயன்படுத்த தவறக்கூடாது''

சங்கானை, திங்கள்

''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற முதுமொழிக்கிணங்க எம்மவர்கள் முன்னேறுவதற்கு இதுபோன்ற பிரிவு மிக முக்கியமானதாக அமையும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'உடன் உதவும்' பகுதியில் பொது மக்கள், குறிப்பாக மாணவர்கள் அதிக பயன்பெறக்கூடிய புத்தகங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள நாம் தவறக்கூடாது. மேற்படி 'உடன் உதவும்' பகுதி விருத்தியடைவதற்குப் பொதுமக்கள் நல்ல நூல்களை நன்கொடையாகக் கொடுத்து உதவுவதுடன் சிறந்த ஆலோசனைகளையும் எங்களுக்குத் தர முன்வரவேண்டும்'' என்று சங்கானைப் பட்டினசபை நூல்நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'உடன் உதவும்' பிரிவைத் திறந்துவைத்துப் பேசிய சங்கானைப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

## வெளிவந்துவிட்டன

2-ம்வகுப்பு முதல் க. பொ. த. ப. [1-ம் வருட]வகுப்பு முடியவுள்ள

''சைவபோதினி''

கொழும்பு விவேகானந்தசபை நடாத்தும் அகிலஇலங்கைச் சைவசமயபாட பரீட்சைக்குரிய சைவசமய பாடநூல்கள்

4-ம் வகுப்புமுதல் க. பொ. த. ப. (1-ம் வருட) வகுப்பு முடியவுள்ள ''சைவ போதினி'' நூல்கள் பாடசாலைகளில் சைவசமய பாடப்புத்தகங்களாக உபயோகிப்பதற்கு கல்விப் பகுதியினரின் அங்கீகாரம் பெற்றுள்ளன.

வியாபாரிகளுக்கும் பாடசாலைகளுக்கும் தகுந்த கழிவு உண்டு.

கிடைக்குமிடம்:

விவேகானந்தசபை,

34, விவேகானந்தமேடு, கொழும்பு — 13 400.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரம் காவல்காரர் கொலை

# கத்தி, கோடரி, இரத்தம் பரிசோதனைக்கு போகின்றன

## கொலையுண்டவரின் மனைவி செல்லம்மாள் கோர்ட்டில் ஆஜர்

சாவகச்சேரி, செவ்.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த காவல்காரர் ஆசைப் பிள்ளை கொலை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த கொலையுண்டவரின் மனைவியான செல்லம்மா [வயது 35] நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்மாஜிஸ்டிரேட்செல்லம்மாவை இம்மாதம் 20-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்று கோர்ட்டில் சரணடைவார் என எதிர்பார்க்கப்பட்ட ராஜரத்தினம், சரணடையவில்லை. பொலிஸார் இவரை தொடர்ந்து தேடிவருகின்றனர்.

### மெலிந்த உருவம்

'செல்லம்மா' என்று கோர்ட்டில் அழைக்கப்பட்டது. பொதுநிறமான ஒரு மெலிந்த உருவம், மெள்ள மெள்ள அடிஎடுத்துவைத்து மாஜிஸ்டிரேட் முன்னிலையில் வந்து நின்றது. அந்த உருவம் தான் செல்லம்மா. கோர்ட்டில் உள்ள அத்தனை பேரும் ஆவலோடு, அந்தப் பெண்ணை நோக்கினர்.

### கோர்ட்டில் பரபரப்பு

விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும்வெளியேயும் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர். 'செல்லம்மா' என்ற பெயர்கூப்பிடப்பட்டதும்சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டு மீண்டும் அமைதி ஏற்பட்டது.

### சாதாரணமாக தோற்றமளித்தார்

பளங்கட்டி நிற சேலையும், இளஞ்சிவப்பு புள்ளி சட்டையும் அணிந்திருந்த செல்லம்மா தங்க நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை. கூண்டின் அருகே, பிஸ்கால் பெண் பாதுகாப்பாளருடன் அமர்ந்திருந்த செல்லம்மாவை, கோர்ட்டிற்கு வந்தவர்கள் ஆவல் ததும்ப எட்டி எட்டிப்பார்த்தனர். மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கைகட்டியவாறு கோர்ட்டில் உள்ளவர்களை பார்த்தபடி நின்றார். சாதாரணமாகவே தோற்றமளித்தார்.

### நள்ளிரவில் நடந்தது

டிசம்பர் மாதம் 27-ம் திகதி இரவு உருத்திரபுரத்தில் உள்ள 10-ம் வாய்க்காலில் அவரது வீட்டு விருந்தையில் ஆசைப்பிள்ளை, கழுத்து வெட்டப்பட்டு கிடந்தார். கொலையுண்ட ஆசைப்பிள்ளை [வயது 48] பரந்தன் சோடா தொழிற்சாலையில் காவல்காரராக கடமையாற்றிவர், சம்பவம் நடந்த தினம் அவர் வேலைக்குபோகவில்லையெனத் தெரியவருகிறது.

### குடும்ப நண்பர

செல்லம்மாவின் குடும்ப நண்பரென சந்தேகிக்கப்படும் வட்டுக்கோட்டையை சேர்ந்த இராசரத்தினத்தை [வயது 32] பொலிஸார் கடந்த 12 நாட்களாக தேடிவருகின்றனர். இதுவரை அவர் கைதுசெய்யப்படவில்லை.

### புதல்வர்கள்

கொலையுண்ட ஆசைப்பிள்ளை ஒரு பிரபல்ய மாந்திரிகர் என்று கூறப்படுகிறது. இவருக்கு செல்வராசா [வயது 17] கணேசானந்தன் [வயது 13] ஆகிய இரு புதல்வர்கள் உண்டு. இரு புதல்வர்களும் பெற்றோர்களுடன் வாழ்ந்து வந்தார்களாம்.

### இன்ஸ்பெக்டர் சாட்சியம்

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன் நேற்று கோர்ட்டில் கூறியதாவது:-

உருத்திரபுரத்தில் டிசம்பர் 28-ந் திகதி ஆசைப் பிள்ளை என்பவர் கழுத்து வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தார். நான் இக் கொலை பற்றி விசாரணை செய்தேன். விசாரணையின் பின் இரத்தக்கறை படிந்த ஒரு கத்தியையும், கோடரியையும் பாரமெடுத்தேன். கொலை சம்பந்தப்பட்ட பொருட்களை கோர்ட்டில் சமர்ப்பிக்கிறேன்.

கொலையுண்ட ஆசைப்பிள்ளையின் மாதிரி இரத்தமும் பரிசோதனைக்கு அனுப்புவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

இரத்தக்கறை படிந்த கோடரியும் கத்தியும் ஆசைப்பிள்ளையின் மாதிரி இரத்தமும் அரசாங்க பரிசோதனை செய்யஇரசாயனபரிசோதகருக்கு அனுப்பபடும்இம்மாதம்20-ம்திகதி தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

---

## நிவாரணம் வழங்கப்பட்டது

காங்கேசன்துறை,ஞாயிறு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்தோருக்கு நிவாரணம் வழங்குவதில் வலி—வடக்கு காரியாதிகாரி திரு. பி எல். பற்றிக்கும் அவரதுபகுதி கிராம சேவகர்களும் ஈடுபட்டுள்ளனர்.

ஏழாலை, இணுவில் ஆகிய இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டஅகதிகளுக்கு நேற்று வலி—வடக்கு காரியாதிகாரி பணத்தைக் கொடுத்துள்ளார். பாதிக்கப்பட்டோருக்கு ஏற்ற வகையில் பணம் கொடுக்கப்பட்டது. இன்னும் இரண்டு மூன்று தினங்களில் மற்றப் பகுதியில் உள்ள அகதிகளுக்கும் பணம்வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

### பஸ்ஸுக்குள்...

[1-ம் பக்க தொடர்ச்சி]

விருந்து கொண்டுவந்ததாகவும் வல்வெட்டித்துறையில் ஒருவரிடம் 23 ஔவையார் சாறிகளும் 33 ரூபாய்ப்படியும்10 சாரங்கள்23 ரூபாய்ப்படியும் வாங்கியதாகவும் இதுதான் தான் செய்யும் முதல்வியாபார மெனவும் தெரிவித்துள்ளார்.

---

### ஆளும் கட்சி....

(1-ம் பக்க தொடர்ச்சி)

தென முடிவுசெய்திருப்பதாகவும் அறியவருகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும், இன்று நடைபெறும் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது.

---

## சீமெந்துக்கு மீண்டும் பேர்மிட்

காங்கேசந்துறை, திங்கள்

சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து பெறுவதற்கு தற்பொழுது பேர்மிட முறை செயற்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்பது ரூபாவுக்கு காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் விற்கும் சீமெந்து காங்கேசந்துறை பகுதியில் உள்ள கடைகளில் பன்னிரண்டு ரூபாவாகவும், வடமராட்சிப் பகுதியில் பதின்மூன்று ரூபாவாகவும் விற்கபபடுகிறதாம்.

தற்பொழுது சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து பெறுவதானல் கிராமசேவகர் மனுக்களை முதலில் பார்வையிட்டு பின்னர் காரியாதிகாரியிடம் சமர்ப்பிக்கின்றனர் இதன் பின்னரே பாவனையாளர் சீமெந்தை பெறமுடிகிறது.

## தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்.

பாடைகட்டுதல், சுருட்டுதல் ஆகிய இரண்டு தொழில்களின் மூலம் பணம் சம்பாதித்து எதுவித குறைவுமில்லாது மகிழ்ச்சியோடு சீவனம் செய்துவந்த ஒருவர் தனது வீட்டிற்குப் பின்வளவில் உள்ள சிறிய தென்னை மரமட்டையில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் நடந்துள்ளது.

இறந்தவரான வெங்கடாசலபதி சின்னத்துரை [வயது 55] யின் மரணவிசாரணையின்போது மனைவி சரஸ்வதி சாட்சியமளித்தார். அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை செய்தார். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## கிணற்றுள் தவறிவிழுந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

மகள் வீட்டுக்கு ஒற்றையடிப்பாதையால் சென்றுகொண்டிருந்த சற்று கண் தெரியாத ஒரு முதியவர் அப்பாதையின் பக்கத்திலிருந்த கிணற்றில் தவறிவிழுந்து இறந்த சம்பவம் கொக்குவில் குரங்குப் பிலாவடி என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

கொக்குவில் டிஸ்பென்சரிக்கு என்று வீட்டில் இருந்து சென்ற இறந்தவரான சின்னையா தம்பையா என்னும் 80வயது முதியவரே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவராவர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விபத்தினால் ஏற்பட்ட மரண மெனத் தீர்ப்பளித்தார்.

[வி. நி]

---


## தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்துத் தெரிந்த ஒருவர் உடனடியாகத் தேவை. சகல தராதரப்பத்திரங்களுடனும், நற்சாட்சிப் பத்திரங்களுடனும் நேரில் வரவும்.

நிர்வாகி

ஈழநாடு,

யாழ்ப்பாணம்.

2050


---

# யாழ். கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனை கழகம்

யாழ்ப்பாணம், செவ்

ஈழநாட்டில் தோன்றிய பல தமிழ் அறிஞர்களின் பழந்தமிழ் நூல்களுக்கு மலிவுப் பதிப்பு என்ற முறையில் புத்துயிர் அளிக்கும் நோக்கத்தோடு அராலி வடக்கில் ஆரம்பமான யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக் கழகம் சமீபத்தில் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு நெறியில் உறுப்பினர்களின் பொருளாதார கலாச்சார நோக்கங்களை விருத்திசெய்தல், உறுப்பினரிடையே சிக்கனம், தன்னுதவி, பரஸ்பர உதவி, முதலியவற்றைக் கொள்ளும் வகையிலும் செயலிலும் ஊக்குவித்தல், பழைய தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை உரைகளோடு அச்சிட்டு வழங்குதல், ஓர் இலக்கியச் சஞ்சிகையை வெளியிடல், இலக்கிய மன்றம், ஆராய்ச்சி நிலையம், நூலகம் ஆகியவைகளை நோக்கமாகக்கொண்டு இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வமுள்ள 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரையும் இக்கழகத்தில் பங்காளர்களாகச் சேரவேண்டுமென இக்கழகக் காரியதரிசி திரு. இ. செல்லத்துரை அறிவித்துள்ளார்.

இக்கழகம் இதுவரை சேக்கிழார் நாயனார் புராணம் என்னும் நூலை மலிவுப்பதிப்பாக வெளியிட்டுள்ளது. மேலும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரையுடனும், பெரியபுராணம் ஆறுமுகத் தம்பிரான் உரையுடனும் வெளிவரவுள்ளது குறிப்பிடத்தக்கது (வி. நி.)

---

## "கோடைவிடுமுறையை நீடிக்குக"

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை ஆரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் கிளையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கோடை விடுமுறை மிகக் குறைக்கப்பட்டதால் மாணவர் கல்வியில் நாட்டஞ் செலுத்த முடியாதபடி உஷ்ணத்தினாலும், உஷ்ண ரோகங்களினாலும்,தொற்று நோய்களினாலும் கஷ்டம் அடைகின்றனர். இதை நிவர்த்தி செய்ய ஏனையவிடுமுறைகளைப் பாதிக்காத வகையில் ஏப்ரல் மாதம் முழுவதற்கும் கோடை விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

உள்ளூர் மாற்றம் நடைபெறும் பொழுது தொடர்ந்து அவ்விடத்தில் வேலை செய்பவர்களை மாற்றவேண்டுமேதவிர, வெளியில் இருந்து மாற்றத்தில் வந்தவர்களை மாற்றக்கூடாது.

புனரமைப்பின் கீழ் கனிஷ்ட பாடசாலைகள் அனைத்தும் 7-ம் வகுப்பு முடிய இயங்கும். 6-ம், 7-ம் வகுப்பு மாணவர் கணித விஞ்ஞான ஆங்கில பாடங்களில் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடம் கல்விபயில ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பின் தங்கிய இடப்பாடசாலைகளில் மாணவர் தொகை போதாமையினால் இத்தகைய ஆசிரியர்களை நியமிக்க முடியாதெனக் காணுமிடத்து அத்தகைய பாடசாலைகளிற்பயிலும் 6-ம், 7-ம் வகுப்பு மாணவர்கள் உயர்தரப் படிப்புப் படிக்க விரும்பின் சமீபத்தில் உள்ள வசதியான பாடசாலைகளிற் சேர அனுமதி வழங்குதல் வேண்டும்.

---

### உலகத்தமிழ்..

[1-ம் பக்கத் தொடர்ச்]

சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2-வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி அகில உலகத் தமிழ் கவிஞர்களிடையே நடாத்தப்பட்ட 'பூம்புகாரில் ஒருநாள்' என்ற கவிதைப்போட்டியில் கவிஞர் இ. நாகராஜனுடைய கவிதை சான்றிதழ் வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவிஞர் இ. நாகராஜன் எழுத்துத்துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டிருக்கிறார். இவருடையகவிதைகள் 'ஈழநாடு' உட்பட ஈழத்து எல்லா பத்திரிகைகளிலும் வெளிவருகின்றன. கவிதையோடு சிறுகதை, நாவல் ஆகிய துறைகளிலும் பிரபல்யம் பெற்று விளங்குகிறார். இவரது சிறுகதை தொகுதி 'நிறைநிலா', கவிஞர் நாகராஜனின் கவிதை நாடகங்கள், கவிதைகள் பல இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகி வருகின்றன.

---

## வீடு கொளுத்தப்பட்டதாம்

இமையாணன், திங்

கெருடாவில் என்னுமிடத்தில் கிடுகினால் வேயப்பட்ட வீடு ஒன்று கொளுத்தப்பட்டதாம்.

கொந்தன் செல்லன் என்பவருடைய வீடே இவ்விதம் கொளுத்தப்பட்டதாகதெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாகப் பொலிஸார் சுந்தரலிங்கம் என்பவரைக் கைதுசெய்துள்ளனர்.

வீட்டின் சொந்தக்காரர் தமது புகாரில் சுந்தரலிங்கம் என்பவர் தனது வீட்டின் கூரைக்கு முதலில் பெற்றோல் ஊற்றியதாகவும் அதையடுத்து தீப்பந்தத்தினால் வீட்டைக் கொளுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

---

இலங்கையில்

## இந்திய கட்டிடக்கலை

சென்னை, ஜன. 8

இலங்கையிலுள்ள 'லங்காதிலக்க' 'கொடலதெனிய' ஆகிய தேவாலயங்களின் கட்டிட அமைப்புகள் தென்னிந்தியக் கட்டிடக்கலை அமைப்புகளைக் கொண்டு விளங்குவதாக இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு கருத்தரங்கில் இலங்கை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருமதி எல். எஸ். தேவராஜா கருத்து வெளியிட்டார்.

இந்திய கட்டிடக் கலைகளுக்கும், கலாசாரத்துக்கும் இலங்கையின் புராதன கட்டிடக் கலைக்குமுள்ள ஒருமைப்பாடுகளை அவர் விளக்கினார்.

---


## தேவை

மனேஜர்:

பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவு சங்கத்திற்கு 25 வயதிற்கு மேற்பட்டவரும், கூட்டுறவு பயிற்சி பெற்றவருமான மனேச்சர் தேவை. பிணை ஆதனம் ரூபா 2000/- ரொக்கம் ரூபா 1000/- 15-1-68 முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும் பெ. வெ. செல்லத்துரை,காரியதரிசி 2054


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org